ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# குறிஞ்சி நிலத்தில முருக வழிபாடு

*முனைவர் மூ.சிந்து*
*உதவிப்பேராசிரியர்*
*டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)*
*காளப்பட்டி, கோயம்புத்தூர் – 641048*

*முன்னுரை*

*தமிழரின் இறைநெறி இயற்கை சார்ந்த ஒன்றாகவும் வழிபடும் மக்கள் சார்ந்த ஒன்றாகவும் இருந்ததைப் பண்டைய இலக்கியங்கள் உணர்த்துகின்றன. “முருக வழிபாடு” என்று பிற்காலகட்டத்தில் “கௌமார” தத்துவமாக சங்கரர் காலத்தில் உருவெடுத்தமையை இலக்கிய சமய வரலாற்றால் அறிமுடிகிறது. “கௌமாரதத்தவம்”, “முருக தத்துவம்” தனித்து சமயதத்துவமாக உருபெறுதற்குரிய சில வித்துக்களைப் பண்டைய இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகிறது. அவ்வகையில் முருகன் தொடர்பான செய்திகளைத் தொகுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.*

*தொல்காப்பியத்தில் ஏழு திணைகள்*

*தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் ஏழு திணைகளைப் பற்றிக் கூறுகிறார். அதில் நடுவில் உள்ள ஐந்து திணைகளும் கடல் சூழ்ந்த உலகில் பகுக்கப்பட்ட பண்புக்கு உரியது என்று கூறுகிறார் இதனை,*

*“கைக்கிளைமுதலாப் பெருந்திணை இறுவாய்*
*முற்படக் கிளந்த எழுதிணை என்ப.”*[1]

*என்று கூறுகிறார்*

*மேலும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனப் பிரித்து நிலமும் காலமும் ஆகிய இரண்டின் இயல்பும் முதற்பொருள் எனவும், தெய்வம், உணவு, விலங்கு, பறவை, மரம், தொழில் அடங்கிய 14 கூறுகள் கருப்பொருள் எனவும், நிலத்தின் தன்மைகள் அடிப்படையில் அக ஒழுக்கங்களாக வரையறுக்கப்பட்டு உரிப்பொருளாயின என்ற கருத்தைத் தொல்காப்பியரால் திணை வரையறுக்கப்பட்டுள்ளதை அறியலாகிறது.*

*குறிஞ்சி நிலத்தின் தன்மை*

*குறிஞ்சி என்பது மலையும், மலை சாரந்த பகுதியாகும். இதனைப் பற்றித் தொல்காப்பியர் அகத்திணையில்*

*“சேயோன் மேய மைவரை உலகமும்”*[2]

*என்று கூறுவதால் முருகன் வாழும்பகுதி மலைப்பகுதி என்பதை அறியமுடிகிறது. குறிச்சித் திணைக்குரிய பொழுது கூதிர் காலமும், யாமமும் ஆகும். (கூதிர் - ஐப்பசி, கார்த்திகை) (யாமம்- நள்ளிரவு)*

*கருப்பொருள்*

*குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருள்களாப் பின்வருவனவற்றைத் தொல்காப்பியர் தொகுத்துரைகின்றார்.*

- ✓ தெய்வம் - முருகவேல்
- ✓ உணவு - திணை, ஜவனம், வெதிர் நெல்

- ✓ விலங்கு - யானை, புலி, பன்றி, கரடி
- ✓ மரம் - வேங்கை,கோங்கு
- ✓ பறவை - மயில்,கிளி
- ✓ பறை - வெறியாட்டு,தொண்டகம்
- ✓ தொழில் - தேனழித்தல்
- ✓ யாழ் (பண்) - குறிஞ்சி
- ✓ பூ - வேங்கைப்பூ, குறிஞ்சிப்பூ
- ✓ நீர் - சுனை நீர் ,அருவிநீர்

உரிப்பொருள்

குறிஞ்சித் திணையின் ஒழுக்கமாக உரிப்பொருளாக

"புணர்தலும் புணர்தல் நிமித்தமும்"[3] சுட்டப்படுகிறது.

குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் மலையும், மலைசார்ந்த பகுதி என்பதால் அந்த மலைப்பகுதிக் கடவுளான முருகனை வழிபாடு செய்தனர் என்பதனை அந்நிலத்தில் மக்கள் பயன்படுத்திய சொற்கள் வாயிலாக அறியலாம்.

"குலம் நினையல் நம்பிகொழுங் கயற்கண்ணிவள்ளி
நலம் நுகர்தான் அன்றே நறுந்தார் முருகன்"[4]

எனசீவகசிந்தாமணியிலும்

"குறமகள் அவள் எம் குலமகள் அவளோடும்
அறுமுக ஒருவரின் அடியணை தொழுதோம்"[5]

என சிலப்பதிகாரத்திலும் வள்ளியுடன் இணைத்துப் பேசப்பட்ட குறிஞ்சிக் கடவுளான பெரும்பெயர் பெற்ற முருகனின் "வேலனாடல்" அல்லது வேலன் வெறியாடல்" என்ற தனிப்பண்பு சங்க இலக்கியத்தில் அகத்திணைக் கூறாகச் சுட்டப்படுகின்றன. கடம்பு, காந்தள் மற்றும் வேங்கை போன்ற மலர்கள் முருகனுடன் மட்டும் தொடர்புபடுத்தப்பட்ட நிலையையும் சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது.

மேலும் குறிஞ்சித் திணையில் வழங்கப்பட்ட கொடிநிலை, கந்தழி, வள்ளி, வெறியாட்டு ஆகியவற்றைப் பற்றித் தொல்காப்பியர் தனது நூற்பாவில்

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலான மூன்றும்
கடவுள் வாழ்த்தோடு கண்ணியே வருமே 6

என்று குறிப்பிடுகிறார்.

கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகிய மூன்றும் பாட்டுடைத் தலைமகனைச் சார்ந்ததாய் உள்ளன. இவை பின்னர் தோன்றிய இலக்கியத்தில் கடவுள் வாழ்த்தோடு பொருத்திப் பார்ப்பதற்கு இடமுண்டு.

கொடிநிலை

கொடிநிலையாவது கீழ்த்திசைக் கண்ணே தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம் எப்புறம் நீளுதல் தன்மையுடையதாதலின் "கொடிநிலை" எனக் கூறுவர் சூரியன், சந்திரன், அக்னி ஆகியவற்றை வெஞ்சுடர் எனலாம்.

"பூங்கண் நெடுமுடிப்பூ வைப்பூ மேனியான்
பாம்புன் பறவைக் கொடிபோல-ஓங்குக
பல்யானை மன்னர் பணியப்பூ பனிமலர்த்தாது
கொல்யானை மன்னன் கொடி"[7]

குளிர்ந்த மலரால் புனைந்த மாலையினையும் கொல்லும் யானையினையும் உடைய தங்கள் மன்னன் கொடி, பலவாகிய யானைகளையுடைய மன்னர் வணங்கா நிற்ப, பொலிவுடைய திருக்கண்களையும் நெடிய திருமுடியினையும் காயாம் பூவை ஒத்த திருமேனியினையும் உடைய மாயவனது பாம்பையுண்ணும் இயல்புடைய கருடக் கொடியை ஒப்ப, உயர்க என்று கொடிநிலையில் கூறப்படுகிறது. பாட்டுடைத் தலைவன் மன்னரின் சிறப்பினைக் குறிப்பதாக கொடிநிலை அமைகிறது.

*கந்தழி*

*கந்தழி என்பது மன்னின், வீரனின் உயர்வைச் சுட்டும் தன்மை உடையதால் அவனது இயங்கு ஆற்றலை சுட்டக்கூடிய ஒன்றாக இருந்தமையை பின்வரும் பாடல் உணர்த்துகிறது.*

*"அன்நெறித் தானும் இவனால் அரண்வலித்து*
*இன்றிவன் மாறாய் எதிர்வார்யார் கன்றும்*
*அடையார் மணிப்பூன் அடையதார் மார்பின்*
*சுடதொழி நின்றெரியச் சோ"* [8]

*எக்காலத்தும் மூட்டார்ந்த மணி அணிகலன்களையுடைய பகைவரது மார்பின் கண் தனது ஒளியை உடைய சக்கரபடை நின்று அழலாநிற்ப அந்த நாளிலே சோ என்னும் அரணத்தை அழித்தவனும் இவ்வேந்தனே. அத்தகைய இவன் மாறா அரண் வலியாதாம் என்றுதேறி இந்நாள் இவனை எதிர்க்கும் பகைவர் யாரோஉளர்? என்று கந்தழியில் கூறப்படுகிறது.*

*வள்ளி*

*வள்ளி என்பது ஒரு இலக்கிய உத்தியாக அமைந்துள்ளதை*

*"வந்தது கொண்டு வராத துணர்தல்"* [9]

*என்பதனால் அறியலாம். புலவராற்றுப்படை முதலாகிய மூன்றும் சார்த்திவருமெனவும் கொள்ளலாம். முருகாற்றுப்படையுள்,*

*"மாடமலி மறுகிள் கூடற்*
*இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த*
*முன்தாள் தாமரைத் துஞ்சி"*

*என்ற வழி, ஒருமுகத்தாற் பாண்டியனையும் இதனுள் தொடர்புபடுத்திஅறியலாம்.*

*பூண் முலையாரர் மனமுருக*
*வேல்முருகற்கு வெறியாடனின்று"* [10]

*அணிகலன்களையுடைய மகளிர் தம் நெஞ்சம் நெகிழும்படி வேலேந்திய முருகக்கடவுளுக்கு வெறி என்னும் கூத்தை ஆடியது" இனிப் பரவற்குச் சார்ந்து வருவதை "கெடலரு மாமுனிவர் நிளிர்ந்துடன்" என்னும் கலிப்பாட்டினுள்*

*அருதிறல் ஒருவநிற் பரவுதும் எங்கோன்*
*தொடுகழற் கொடும்பூண் பகட்டெழின் மார்பில்*
*கயலொடு கலந்த சிலையுடையக் கொடுவரிப்*
*புயல்உறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்*
*ஒன்று முதுகடல் உலகம் முழுவதும்*
*ஒன்றுபுரி நிகிரி உருட்டு வோன் எனவே"* [11]

*என்பதில் பாட்டுடைத் தலைமகனைச் சார்த்தியமையைக் காணலாகிறது.*

*கொற்றவள்ளை*

*கொள்ளவள்ளை என்பது புகழ்தல் கருத்தாகும் என்ற இடத்துப் பாடாண் திணையாகிறது.*

*"மன்னவன் புகழ்கிளந்*
*தொன்னார் நா டழிபிரங்கின்று"*

*வஞ்சி வேந்தனது புகழை எடுத்தோதி அல்வேந்தனின் பகைவர் நாட்டின் அழிவிற்குவருந்தீர்.*

*"கொற்ற வள்ளை ஓர் இடத்து ஆன"* [12]

*என்று தொல்காப்பியரர் கூறுகிறார்.*

*குறிஞ்சி வேந்தன்*

*நான்கு நிலங்களில் ஒன்றாகிய குறிஞ்சி மலை நிலம் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மரங்கள் இருப்பது.இது குறிஞ்சி எனப்பட்டது.*

*"சேயோன் மேய மைவரை யுலகு"*

*என்ற தொல்காப்பியரது வசனப்படி குறிஞ்சி நிலத்துக்கு அரசன் குன்றுதோறும் ஆடுங்குமரன் ஆவான்.*

*"விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ"*

*என்று திருமுருகாற்றுப்படையில் கூறப்படுகிறது.*

வேலன் வெறியாட்டு

வேலன் வெறியாட்டில் மிகச் சிறந்த தலைமையுடைய கோழிக் கொடியோடு பொருந்துமாறு செய்து நெய்யோடு வெண்சிறு கடுகையும் அப்பி, தான் வழிபடுதற்கு உரிய மந்திரத்தை மறைவாக ஓதி வழிபட்டு வளமான மலர்களை தூவி, வடிவாலும், நிறத்தாலும் ஒன்றுடன் ஒன்று மாறுபட்ட இரண்டு ஆடைகளை உள் ஒன்றும் புறமொன்றுமாக உடுத்தி சிவந்த நூலை கையில் காப்பாகக் கட்டுவர். வெள்ளை பொரியைத் தூவி வலிமை மிக்கதும் பெரிய காலையுடையதும் ஆகிய கொழுத்த கிடாயினது குருதியோடு பிசைந்த தூய வெள்ளரிசியைச் சிறுபலியாக இட்டு பிரப்பரசி (பூவும், அரிசியும்) கலந்து கொள்கலங்களில் வைப்பார்கள் மற்றும் சிறிய மஞ்சள் ஓடு நறுமணம் கமலும் சந்தன முதலியவற்றை தெளித்து பெரிய குளிர்ந்த செவ்வலர் மாலையினையும் பிற நல்ல குளிர்ந்த மாலைகளையும் ஒத்த அளவினதாக அறுத்து அசையும்படி அவற்றைத் தொங்கவிட்டு மரங்கள் செரிந்த மலை பக்கத்தில் உள்ள நல்ல ஊர்களைப் பசியும் பிணியும் பகையும் நீங்குக என்று வாழ்த்துவர். நறுமணப் புகை கொடுத்து குறிஞ்சி பண் பாடி முழங்குகின்ற ஓசையையுடைய அருவியுடன் இனிய இசைக்கருவிகளையும் முழக்குவர். சிவந்த நிறத்தினையுடைய பல பூக்களைத் தூவி அச்சம் வரும்படி குருதி கலந்த தினையையும் பரப்பி, குறமகளிர் முருகனுடைய இசைக்கருவிகளை முழக்கி “இறைவன் இவன்” என்பார் அஞ்சும்படி அம்முருகக் கடவுள் வேலன் மீது ஆவேசித்து வரச் செய்து வழிபடுவர் அம்மக்கள் வாழும் அச்சம் பொருந்தின நகரின் கண் என்பதனை “மாண்தலைக் கொடியோடு மண்ணி அமைமவர” என்ற பாடல் வழி அறியலாகிறது.

குறிஞ்சி நிலத்தில் வழிபாடு

குறிஞ்சி கடவுளான முருகனின் வழிபாடு தமிழகத்தில் குறிஞ்சி நிலப்பரப்பில் மட்டுமின்றி பிற நிலப்பரப்புகளிலும் பறந்து கிடந்தது என்பதை ஐயத்துக்கு இடமின்றி அறியலாம். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற ஒருமைப்பாட்டுடைய ஒற்றுமையான வாழ்வினை மேற்கொண்டு இருந்த தமிழ் மக்களிடையே இவ்வழிபாடு பொறையுடைமை ஒருமைப்பாட்டுணர்வு ஆகியவற்றை உருவாக்குமளவிற்கு விரிவடைந்ததென கொள்வது மிகைப்படுத்தப்பட்ட கூற்றன்று. மேற்கூறியவற்றின் வாயிலாக குறிஞ்சி நிலத்தில் வழிபாடு மக்கள் முருகனிடம் கொண்ட பக்தி வீரம் சிறப்பு ஆகியவற்றைப் பற்றி அறிய உதவுகின்றது

தமிழரும் முருக வழிபாடும்

தமிழரும் முருக வழிபாடும் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தை முன் தோன்றிய மூத்த இனம் என்று தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளும் தமிழர் மனநிலைக்கும் குன்ற கடவுள் குமரனுக்கும் உள்ள தொடர்பு பற்றி நாம் அறியமுடிகிறது.

முருக வழிபாடு தமிழர் பண்பாட்டோடு மொழியோடு தத்துவத்தோடு பழக்க வழக்கங்களோடு ஒன்றுபட்டு இருக்கிறது. இவ்வொற்றுமை ஓராயிரம் இரண்டாயிரம் ஆண்டுகால கட்டத்தில் உருவாயிருக்க இயலாது.

பக்தி என்பது ஒரு தனி மனித உணர்வை இறைவனுடன் இணைப்பதாகும். உணர்வு ஒன்றே உள்ள தூய்மை ஒன்றே அங்கே பாகுபாடும் கிடையாது. முருகு என்ற சொல்லில் இடையினம் கு வல்லினம் என்று சொல்கிறார் தமிழறிஞர்கள். சமய அடிப்படையிலும் சமுதாய அடிப்படையிலும் தத்துவ அடிப்படையிலும் என் நோக்கில் பார்த்தாலும் முருகன் தமிழரின் வாழ்வோடு இன்றியமையாதவனாக இருந்திருக்கிறான் என்பதை அறிய முடிகிறது.

முடிவுகள்

- ✓ சங்க இலக்கியங்களில் நம்பிக்கை வழிபாடு என்ற அடிப்படையில் மட்டுமே முருகன் பற்றிய செய்திகளைக் காண முடிகிறது.
- ✓ வீரத்தின் அடையாளமான முருகன் வழிபாடு சங்க கால கட்டத்தில் கடவுள் கோட்பாடாக உருப்பெறவில்லை.
- ✓ அகமன உணர்வின் வெளிப்பாட்டாக முருகன் வழிபாடு இருந்ததை அறிய முடிகிறது குறிப்பாக கொற்றவள்ளை, வெறியாடல் ஆகியவற்றைக் கூறலாம்

- ✓ ஆதிகால மனிதன் குன்று சார்ந்த குறிஞ்சிப் பகுதிகளில் வாழ்ந்த காலத்தில் முருகன் கடவுளாக படைக்கப்பட்டிருக்க வேண்டும். சமூக ஆய்வாளர்களின் கருத்துப்படி முருகன் ஒரு இனத்தின் தலைவனாக இருந்து பெரும் வெற்றிகளை ஈட்டி தெய்வீகத் தன்மைக்கு உயர்த்தப்பட்டு நாளடைவில் ஒரு தெய்வமாக வழங்கப்பட்டு இருக்கலாம் மழையே தெய்வமாகவும் முருகனை மலை வாழும் இறையாகவும் வழிபட்டிருக்கலாம்.
- ✓ மழை சார்ந்த வாழ்வை அடிப்படையாகக் கொண்டுள்ள தொல்குடி மக்களின் கடவுளாக முருகன் இருந்திருக்கலாம். சாதாரண மக்களின் கடவுளாக விளங்கிய முருகனுக்கும் மக்களுக்கும் இடையே நிலவிய உறவு அவனை வழிபட்ட முறைகளில் இருந்து தெரிய வருகிறது. அதாவது ஆரிய கடவுளைப் போல் வேள்விகளுக்காக காத்திருக்காத இந்த கலிகால கந்தனை தமிழர்கள் ஆடல் பாடல் வாயிலாக வணங்கி தொழுதுனார் அரிசியும் பூவும் கொட்டிப் பூசித்தனர்.

*அடிக்குறிப்புகள்*

*1.தொல்காப்பியம் அகத்திணை நூற்பா 1*
*2. தொல்காப்பியம் அகத்திணை நூற்பா 5*
*3. தொல்காப்பியம் அகத்திணை நூற்பா 16*
*4.தமிழகத்தில் முருக வழிபாடு பக்கம் – 5*
*5.சிலம்பு வஞ்சிக்காண்டம் – பாடல் 17*
*6. தொல்காப்பியம் புறத்திணை நூற்பா 85*
*7.புறப்பொருள் வெண்பாமாலை பாடாண் திணை பாடல் – 39*
*8. புறப்பொருள் வெண்பாமாலை உழிஞை திணை பாடல் – 07*
*9. தொல்காப்பியம் மரபியல் நூற்பா 110*
*10. புறப்பொருள் வெண்பாமாலை பாடாண் திணை பாடல் – 41*
*11.யாப்பெருங்கலக்காரிகை – மேற் – 28*
*12. தொல்காப்பியம் புறத்திணை நூற்பா 28*

********* ********* ********** ********* ********* ********** ********** **********